1974 சனவரி 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மத்திய அரசினால் தேசிய நெடுஞ்சாலை (மூல) வேலைகளுக்கு 1971-72-ல் தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,94,01,600.

(இ) ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த தேசிய நெடுஞ்சாலைகளை அமைப்பதில் எல்லா மாநிலங்களையும்விட நம்முடைய மாநிலம்தான் கொடுக்கப்பட்ட தொகையை ஒழுங்காகவும் சரியாகவும் செலவு செய்து வருகிறது என்று கூறப் படுகிறது. நாம் ரூ. 8 கோடி செலவு செய்து—கடன் என்ற வகையில் —ஒரு சீ.இ. போட்டால், அதற்கு மேலும் ரூ. 8 கோடி மத்திய அரசு கொடுக்கும் வகையில் மத்திய அரசிடம் ஒரு திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்களே, அதையொட்டி 2 சீ.இ.-க்களைப் போட்டு, இரண்டு ரூ. 8 கோடியை வாங்க நம் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உசிலம்பட்டிப் பகுதியில் பல ரோடுகள் சென்ற ஆண்டிலேயே சேர்க்கப்பட்டும் இன்னும் அவை செயலாக்கப்படாமல் இருக்கின்றனவே, அது பற்றி பிரதம இன்ஜினீயர் போன்றவர்களிடம் சொல்லியும் ஒன்றும் நடைபெறவில்லையே, ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனிப்பட்ட ரோடுகளைப்பற்றி, தனியாகக் கேள்விகள் போட வேண்டும். பொதுப்படையான பதில்கள்தான் என்னிடம் இருக்கின்றன.

இராசசிங்கமங்கலம் கண்மாயின் குறுக்கே பாலம்

* 11 வினா—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—